# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலத்தின் 27-ஆம் ஞாயிறு | 4 அக்டோபர் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: **திருஅவை – மறைத்தூதுரைக்கும் சீடர்களாக இருத்தல்**




## புனித பிரான்சிஸ் அசிசியாரின் முன்மாதிரியின் வழியாக 'ஒன்றித்த பயணத்தின் (Synodality) முறையைத் தழுவுதல்'ஒன்றித்த பயணம் '

அல்லது 'ஒன்றிணைந்து பயணித்தல்' (Synodality) என்ற கருத்து இயேசுவின் காலத்திலிருந்தே தொடங்கிவிட்டது. இது கிறிஸ்துவைப் பின்பற்றுவதன் ஆழமான அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது. அது அந்தக் காலக்கட்டமாக இருந்தாலும் அல்லது ன்றைய காலத்திலாகட்டும். அசிசி நகர் புனித பிரான்சிஸ் அத்தகையோரில் ஒருவராகத் திகழ்ந்தார்.

தூதுரைப்பணியில் ஈடுபடும் சீடத்துவம் என்பது தனிப்பட்ட மனமாற்றத்தையும், அதன் பின் பிறரைச் சென்றடைவதையும் குறிக்கிறது. புனித பிரான்சிஸைப் பொறுத்தவரை, அவர் தனது மனதிலும் இதயத்திலும் ஒரு தீவிரமான மாற்றத்தைக் கொண்டிருந்தார்.

### 1 முழுமையான மனமாற்றம்: அக மற்றும் புற மாற்றங்கள்

- அக மனமாற்றம்: உலகியல் சார்ந்த விஷயங்களுக்குப் பதிலாக கிறிஸ்துவின் தாழ்மையையும் அமைதியையும் அவர் தேர்ந்தெடுத்தார்.
- புற மனமாற்றம்: அவர் வறுமையை ('திருமதி வறுமை' அல்லது 'Lady Poverty') தேர்ந்தெடுத்தார்; இது தனிப்பட்ட அல்லது மறைவான விஷயம் அல்ல. அவர் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்த மக்களிடையே வாழ்ந்து வந்தார்.

### 2 தேவைகளைச் சென்றடைதல்

புனித பிரான்சிஸ் தேர்ந்தெடுத்த பாதை, "விளிம்புநிலை மக்களையும் சிறப்புத் தேவைகள் உள்ளவர்களையும் சென்றடைவதன் மூலம் தூதுரைப்பணிக்கான பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளுதல்" (FD#145) என்ற கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. புனித பிரான்சிஸைப் பொறுத்தவரை அவர்கள் யார்?

**தொழுநோயாளர்கள்:** தொழுநோயாளர்கள் சமூகத்தினர் அவரது சகோதர சகோதரிகளாகக் கருதப்பட்டனர்; அவர்களிடையே பணியாற்றுவதே அவரது முதன்மையான பணியாக ருந்தது.

**மறக்கப்பட்டவர்கள்:** புனித பிரான்சிஸ் மனமுடைந்த மக்களைச் சந்தித்தார், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு கண்ணியத்தை அளித்தார், எல்லாவற்றிற்கும் மேலாக, ஏழைகளிடத்தில் கிறிஸ்துவின் முகத்தைக் கண்டார்.

### 3 மீண்டும் கட்டிஎழுப்புதல்

"இடிந்து விழும் நிலையில் உள்ள என் திருச்சபையைச் சென்று மீண்டும் கட்டிஎழுப்பு" என்பது புனித பிரான்சிஸ் செய்ய வேண்டிய ஒரு வெளிப்படையான செயல் மட்டுமல்ல; அது அதற்குமேலான ஆழமான அர்த்தத்தைக் கொண்டது - அதாவது நம்பிக்கையாளர்களின் சமூகத்தை மீண்டும் கட்டிஎழுப்புவதாகும். உண்மையான மற்றும் மகிழ்ச்சியான சமூக வாழ்வின் மூலம் திருஅவையை (நம்பிக்கையாளர்களை) அடியிலிருந்து மீண்டும் கட்டிஎழுப்புவதும், அதற்குப் புத்துயிர் அளிப்பதுமே அவரது பணியாக இருந்தது.

### நமது அர்ப்பணிப்பு என்ன?

ஒன்றிணைந்து செயல்படும் திருஅவை ஒரு பகுதியாக, நமது தீவிரமான பங்கேற்பு மிக முக்கியமானது. இது நம்மை நாமே உற்றுநோக்கிப் பின்வரும் கேள்விகளைக் கேட்கத் தூண்டும்:

- கிறிஸ்து என்னை ஓர் உள்ளத்தின் மனமாற்றத்தை அனுபவிக்க அழைக்கிறார். முன்னேறிச் செல்ல நான் ஒரு 'மறைத்தூதுரைக்கும் சீடராக' இருப்பேனா?
- கிறிஸ்துவின் சீடராக இருப்பதால், உள்ளுக்குள் போராடிக்கொண்டிருக்கும் சமூகத்தினரை என்னால் அடையாளம் காண முடியுமா? ✠

Celebrate Listen Walk (cf Is 2:2-5)
MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**
எசாயா 5: 1-7
திருப்பாடல் 80: 9, 12-16, 19-20
பிலிப்பியர் 4: 6-9
மத்தேயு 21: 33-44

"மிகவும் பலவீனமானவர்கள், குறைபாடுகள் கொண்டவர்கள் மற்றும் துன்பப்படுபவர்கள் கூட தங்கள் சொந்த வழியில் தூதுரைப்பணியாளர்களாக இருக்க முடியும் என்று நான் நினைக்க விரும்புகிறேன்; ஏனெனில், பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் நன்மையை எப்போதும் பகிர்ந்துகொள்ள முடியும்."

– திருத்தந்தை பிரான்சிஸ், கிறிஸ்துஸ் விவிட் (Christus Vivit) (2019), எண் 239

INTERNAL CIRCULATION ONLY
BUL 40/2026

வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org